# வாம்பு மரைக்கார் வழிக்காவியம்



மூதூர்- எம்.எம்.ஏ.அனஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாப்பு மரைக்கார் வழிக்காவியம்

மூதூர் எம். எம். ஏ. அனஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விபரம்


| | |
|---|---|
| நூலின் பெயர் | - வாப்பு மரைக்கார் வழிக்காவியம் |
| விடயம் | - காவியம் |
| ஆசிரியர் | - மூதூர் எம்.எம்.ஏ.அனஸ் |
| அட்டைப்படம் | - விஜி |
| வெளியீடு | - மூதூர் கலை இலக்கிய ஒன்றியம் |
| உரிமை | - ஆசிரியருக்கு |
| முதற்பதிப்பு | - மே - 2015 |
| விலை | - 150.00 |
| ISBN | - 978-955-41569-6-8 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

வாப்பு மரைக்காயரின் புத்திரியின் புதல்வியும் செய்லாக் காசிம் மரைக்காயரின் மருமகளும் அப்துல் லத்திப் ஹாஜியாரின் மகளும் ஜவாப்தீன் ஹாஜியாரின் மனைவியுமாகிய ஹாஜியாணி ஜெஸிமா ஜவாப்தீன், அவரின் புதல்வியான, ஜாபிறா அனஸ் ஆகியோர்களுக்கு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

ஓர் சமூகத்தின் முன்னோடிகளாக திகழ்ந்தவர்களை அந்த சமூகம் தனது முதுசமாக கருதி அவர்களின் வரலாறுகள் அழியா வண்ணம் பேணிப் பாதுகாக்க வேண்டும். தம் முன்னோர்களின் வரலாற்றை பேணிப்பாதுகாக்காத சமூகம் வரலாற்றில் தமது இருப்பின் பெறுமானத்தை இழந்துவிடும். அந்த வகையிலே மூதூரில் எத்தனையோ பெரியோர்களும் சமூகத்தலைவர்களும் தோன்றி மூதூர் சமூகத்தின் உயர்ச்சிக்கும் எழுச்சிக்கும் பாரிய பங்களிப்பைச் செய்துள்ளார்கள். ஆனால் அவர்களின் பூரணமான வரலாறுகள் எதுவுமே இல்லாமலும் அவர்கள் யாரென்று அறியாத நிலையிலும் மூதூர் இருந்து கொண்டிருப்பது மிகவும் வேதனைக்குரிய விடயமாகும். ஊரின் பெரியார்களைக் கண்ணியப்படுத்தும் போது வருங்கால சந்ததிகளும் இளைஞர்களும் தம் முன்னோர்கள் போல சமூகப் பெரியோர்களாக வர வாஞ்சை கொள்வார்கள் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

அந்த வகையிலே மூதூரின் அயற்கிராமமான கிண்ணியாவில் கவிஞர் அண்ணல் கௌரவப்படுத்தப் படுகின்றார். அண்ணல் நகர் என்றும் அண்ணல் வீதியென்றும் அவரின் நாமங்களை அங்கு வாழச் செய்து வருகின்றார்கள். திருகோணமலையில் ஏகாம்பரம் என்ற முதுசத்தைக் காக்க ஏகாம்பரம் விளையாட்டரங்கு என்ற பெயரை இட்டு அவரை நினைவு கூர்ந்து வருகின்றனர். கிழக்கின் முஸ்லிம் பிரதேசமான மருதமுனையில். அதன் முதுசம் புலவர் மணி ஆ.மு.சரிப்தீன் அவர்களின் நினைவாக பாடசாலையும் வீதியும் இருந்து கொண்டிருக்கின்றது. அதே போல் காரைதீவில் பிறந்த தமிழறிஞர் சுவாமி விபுலானந்தரை கிழக்கின் ஒவ்வொரு தமிழ் பிரதேசமும் பல்கலைக்கழகமும் கௌரவப்படுத்திக் கொண்டிருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் மூதூர் பிரதேசத்தில் எத்தனையோ தமிழறிஞர்களும் , புலவர்களும் சமூகத்தலைவர்களும் வாழ்ந்துள்ளார்கள். அவர்களில் எவரையும் இந்தச் சமூகம் மீட்டிப் பார்த்ததாகத் தெரியவில்லை. இந்த உணர்வு என் உள்ளத்தை ஆட்கொண்ட போது தான். நான் இந்த மூதூர் மண்ணில் வாழ்ந்து மடிந்து போன பெரியோர்கள் நால்வரின் நாமங்கள் உலகில் வாழும் வண்ணம் அவர்களைப் பற்றிய தகவல்களை வாப்பு மரைக்கார் வழிக்காவியம் எனும் தலைப்பில் ஓர் காவிய நூலாக வெளிக் கொணர்ந்துள்ளேன்.

இதே போல இந்த மண்ணில் மறைந்து போன மற்றைய பெரியார்களின் வரலாறுகளையும் ஆவணமாக கொண்டு வரவேண்டிய ஓர் தார்மீகப் பொறுப்பு மூதூரின் கற்றறிந்த சமூகத்திற்கு இருக்கின்றது. என்பதையும் வலியுறுத்த விரும்புகின்றேன். எனவே முடிந்தவர்கள், இயன்றவர்கள் இப்பணியைச் செய்ய வேண்டும். என்ற ஓர் ஆதங்கம் என்னில் இருந்து கொண்டிருக்கின்றது. குறைந்த மட்டம் மூதூரின் வீதிகள் பாடசாலைக் கட்டடங்கள் போன்ற வற்றுக்காவது மூதூர் மண்ணிண் மகிமைக்குரியவர்களின் நாமங்கள் பொறிக்கப்பட்டு அவர்கள் கௌரவப்படுத்தப்பட வேண்டும். பிறநாட்டையும், தொலைதூரத்தையும் சேர்ந்த பெரியார்களான இக்பால், ஜாயா, போன்றவர்களின் பெயர்களை மூதூரில் வீதிகளுக்குச் சூட்டிய சமூகம், ஏன் மூதூரில் பிறந்த பெரியார்களின் பெயர்களை சூட்ட முனையவில்லை என்பது தான் புரியாத புதிராக இருந்து கொண்டிருக்கின்றது. மூதூர் மத்திய மகாவித்தியாலயத்தின் ஓர் கட்டடம் வாப்பு மரைக்காரின் பெயரை ஞாபகமூட்டிக் கொண்டிருக்கின்ற அதே வேளை இன்று மூதூர் பொது விளையாட்டு மைதானம் எனப் பெயரிடப்பட்டுள்ள மைதானம் செய்லாக் காசிம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரைக்கார் விளையாட்டரங்கு எனப் பெயர்தாங்கி ஓர் கல்லில் பெயரும் பொறிக்கப்பட்டு ஓர் மூலையில் நடப்பட்டிருந்தது. இன்று அந்தக்கல் அகற்றப்பட்டதுடன் அந்த இடத்தில் கரிஸ் சிறுவர் விளையாட்டரங்கு என்றும் அம் மைதானத்துக்கு பொது விளையாட்டு மைதானம் என்றும் பெயரிடப்பட்டுள்ளது.

இவ்வாறு சமூகப் பெரியார்களின் நாமங்கள் மூதூர் மண்ணில் மறைக்கப்பட்டு வருகின்றமை வேதனையான விடயமாகும். ஏதோ எனது இந்தக் காவிய நூல் மூதூரின் நான்கு சமூகத் தலைவர்களை யாவது ஞாபகப்படுத்தும் என்ற உள நிறைவு எனக்கேற்படுகின்றது. இதே போல் இன்னும் பல மூதூர் பெரியார்களின் வரலாறுகளையும் நூலுருவில் கொண்டு வரும் வாஞ்சை என்னுள் மேலோங்கி நிற்கின்றது. சந்தர்ப்பம் சாதகமாக அமையும் வேலையில் எனது இந்த ஆசை நிறைவேறும் என நம்புகின்றேன்.

**பெரிய பாலம்**
**மூதூர் - 05**
**தொடர்பு – 0776288299**

**மூதூர் எம். எம். ஏ. அனஸ்**
**10 - 05 - 2015**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாப்பு மரைக்கார்

மூதூரின் ஸ்தாபக குடிமகனான இவர் அன்றைய மூதூரின் தலைமையை அலங்கரித்தவர். மூதூர் நொக்ஸ் வீதி பெரிய பள்ளி வாயலின் தலைவராகவும் ஸ்தாபகராகவும் திகழ்ந்தார். பழங்கால மூதூரின் சகல சமூக நிகழ்வுகளுக்கும் தலைமை வகித்தார். மூதூர் மத்திய கல்லூரி (தேசியப் பாடசாலையின்) ஸ்தாபகராகவும் இருந்தார். இவரைக் கௌரவப்படுத்தும் வகையில் மூதூர் மத்திய கல்லூரியின் கட்டடம் ஒன்றுக்கு வாப்பு மரைக்கார் கோல் எனப் பெயரிடப்பட்டுள்ளது.

## செய்லாக் காசிம் மரைக்கார்

இவர் வாப்பு மரைக்காரின் மைந்தனாவார். தன் தந்தையைப் போல இவரும் தன் தந்தையின் பிற்பட்ட காலத்தில் மூதூருக்கு தலைமை தந்தார். அன்றைய மூதூர் பட்டின சபையின் தலைவராகவும் இருந்ததுடன் அன்றைய மூதூர் சமூகத்தின் பல்வேறு நிகழ்வுகளுக்கும் தலைமை தாங்கினார். மூதூர் நத்வதுல் உலமா அறபிக் கல்லூரியின் முக்கிய ஸ்தாபகர்களில் ஒருவராகவும் இருந்தார்.

இவரை ஞாபகப்படுத்தும் வண்ணம் மூதூர் விளையாட்டு மைதானத்திற்கு செய்யலாக் காசிம் மரைக்கார் விளையாட-டரங்கு என்ற பெயர் சூட்டப்பட்டு அவரின் பெயர் பொறிக்கப்பட்ட கல்லும் அம் மைதானத்தின் மட்டக்களப்பு வீதியின் தெற்கெல்லையில் நடப்பட்டிருந்தது. ஆனால் இன்று அக்கல்லும் அகற்றப்பட்டு செய்லாக் காசிம் மரைக்கார் விளையாட்டரங்கு என்ற பெயரும் இல்லாமலா க்கப்பட்டுள்ளது. கரிஸ் சிறுவர் பாக் என்றும் பொது விளையாட்டு மைதானம் என்றும் பெயரிடப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜவாப்தீன் காஜியார்

இவர் 10 - 11 - 1944ல் மூதூரில் பிறந்தார். வாப்பு மரைக்காரின் பேரனும் செய்லாக்காசிம் மரைக்காயரின் மைந்தனுமாவார். தன் ஆரம்பக் கல்வியை மூதூர் மத்திய மகா வித்தியாலயத்திலும் பின் வந்தாறுமுளை கல்லூரி யிலும் கற்றார். தன் தந்தையின் உடன் பிறந்த சகோதரியின் மகள் காஜியாணி ஜெஸிமாவை மணந்தார். ஜஃபர், ஜம் சித் அலி ஜஸ்ரி, ஜாபிறா அனஸ் ஆகிய மூன்று ஆண்மக்களும் ஒரு புத்திரியும் அவரின் வாரிசுகளாக உள்ளனர். எஸ்.எம் ஜவாப்தீன் காஜியார் தம் தந்தையார் , பாட்டனார் போன்று தாமும் சமூக சேவையில் மிகத் தீவிரமாக ஈடுபட்டார்.

மூதூர் பிரதேச சபையில் குறித்துறைக்கப்பட்ட உத்தியோகத்தராக (விசேட ஆணையாளர்) பதவி வகித்த இவர் மூதூர் பெரிய பள்ளி வாயல், பெரிய பாலம் ஜீம்ஆப் பள்ளிவாயல் பேன்றவற்றின் தலை-வராகவும் மூதூர் பள்ளிவாயல்கள் சம்மேளனத் தலைவராகவும் யுத்த காலத்தில் சமாதான குழுவின் தலைவராகவும் திகழ்ந்தார். அத்துடன் விவசாயச் சங்கங்கள் பொது அமைப்புக்கள் பலவற்றிலும் இணைந்து செயல்பட்டார். மேலும் மூதூர் திடீர் மரண விசாரணை அதிகாரியாகவும் சமாதான நீதிவானாகவும் பணிபுரிந்தார்.

மூதூரின் முன்னேற்றத்திற்காகப் பெரிதும் பாடுபட்ட இவர் மூதூரில் அமைதி நிலவவேண்டும் என்பதற்காகவும் அயராது செயல்ப்பட்டார்.

உண்மை நேர்மை கண்ணியம் கட்டுப்பாடு இவைகளை தனக்குரித்தாக்கிக் கொண்டு ஊரில் உன்னத மனிதனாகத் திகழ்ந்தார். இவரின் வாழ்வும் செயலும் வருங்கால சந்ததிகளுக்கு ஓர் முன் மாதிரியாக அமையும் என்ற திடமான நம்பிக்கை எனக்குண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் சந்தர்ப்பத்தில் அறிவியல் ஞானி அரிஸ்டோட்டில் குறிப்பிடும் போது "நல்ல பெற்றோர்களுக்குப் 'பிறக்கும் பிள்ளைகள் அநேகமாக தம் பெற்றோர்களைப் போல நல்லவர்களாகவே இருப்பார்கள் என எதிர்பார்க்கலாம் என்றார்.

இக்கூற்றுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது மர்கூம் அல்-ஹாஜ் எஸ். எம். ஜவாப்தீன் அவர்கள் தம் தந்தை செய்லாக்காசிம் மரைக்காயர், தம் பாட்டனார் வாப்பு மரைக்காயர் என்ற தொடரில் அவர்களைப் போன்று சமூக சேவை மனப்பாங்கும் நல்நோக்கும் கொண்ட மாமனித னாகக் காணப்படுகின்றார்.

2016–08–04ந் திகதி மூதூரில் ஏற்பட்ட வன்செயலின் காரணமாக மூதூர் மக்கள் எல்லோரும் கந்தளாய் எனும் ஊருக்கு இடம்பெயர்ந்து சென்ற வேளை இவரும் குடும்பமாக கந்தளாயில் இருந்து கொழும்புக்குச் சென்றார். அங்கு 08 – 08 – 2006 ல் தனது 63ம் வயதில் மௌத்தானார். இவரின் ஜனாஸா மூதூரில் மக்கள் இல்லாததன் காரணமாக (இடம் பெயர்வு) கொழும்பு குப்பியாவத்தை மைய வாடியில் நல்லடக்கம் செய்யப் பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எம்.ஏ.கே. அப்துல் லத்திப் ஹாஜியார்

அப்துல் லத்திப் ஹாஜியார் அல்ஹாஜ் முகம்மது அப்துல் காதர் ஆலிம் கொலிசம்பீவி தம்பதியினருக்கு மகனாக 1917.11.11 ஆம் திகதி மூதூரில் பிறந்தார்.

இவர் தனது ஆரம்பக்கல்வியை மூதூர் கோட்டையாற்றுப் பாடசாலையிலும் (தி/மூதூர் மத்திய கல்லூரி), பின்னர் திருகோணமலை சென். ஜோசப் கல்லூரியிலும் பயின்றார். இவர் தனது கல்வியை ஆங்கில மொழி மூலம் பயின்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

நீர்ப்பாசனத் திணைக்களத்தில் தொழில்நுட்ப உதவியாளராக (Technical officer/ Technical Assistant) நியமனம் கிடைக்கப்பெற்றார் மூதூரின் முதலாவது தொழில்நுட்ப உத்தியோகத்தராவார்.

மூதூரைச் சேர்ந்த சமூக சேவையாளரான வாப்பு மரைக்காரின் மகளான சபியா உம்மா என்பவரை திருமணம் செய்து கொண்ட இவருக்கு அல்ஹாஜ் முகம்மது பாறூக் (பொறியியலாளர் - லண்டன்) எனும் ஒரு மகனும், ஹாஜியானி ஜெஸீமா ஜாவாப்தீன் எனும் ஒரு பெண்ணும் மக்கட் செல்வங்களாக உள்ளனர்.

தனது சமகாலத்து நண்பர்களை ஒன்றிணைத்து நமதூரில் இவர் பல்வேறு சமூகப் பணிகளைப் புரிந்துள்ளார். 'மூதூரில் நூரானிய்யா கிராம அபிவிருத்திச் சங்கத்தை உருவாக்கி அதன் ஸ்தாபகத் தலைவராக செயற்பட்டு தி/அக்கரைச்சேனை அ.மு.க.பாடசாலையை (தி/அல் ஹிதாயா ம.வி) உருவாக்கியதோடு இன்னும் பல சமூகப்பணிகளிலும் ஈடுபட்டுள்ளார். பெரியபாலம் ஜும்ஆ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளிவாயலை உருவாக்கிய முக்கிய ஸ்தாபகர்களுள
இவரும் குறிப்பிடத்தக்க ஒருவராவார். அத்துடன் தி
பெரிய பாலம் அ.மு.க.பாடசாலையை (தி/அல்-மின
ம.வி) உருவாக்கிய ஸ்தாபகர்களுள் இவரும் ஒரு
வராவார்.

மூதூர் பள்ளிவாயல்கள் சம்மேளனத்தின் தலைவராகவு
சில காலம் கடமை புரிந்துள்ளார். இக்பால் வீதியி
அமைந்துள்ள றகுமானிய்யா பெண்கள் அறபுக்கல்லு
ரியை ஆரம்பித்து நிருவகித்தும் வந்துள்ளார். மேலு
இக்பால் வீதியில் தனக்குச் சொந்தமான இரண்டு ஏக்க
காணியை தி/புர்க்கானியா வித்தியாலயத்திற்கு
நன்கொடையாக வழங்கியுதவினார்.

இலங்கை முஸ்லிம்களின் அன்றைய தலைவரா
சேர்.றாஸீக் பரீட் அவர்களுடன் நெருக்கமா
உறவுகளைக் கொண்டிருந்த இவர் மூதூரிலு
சோனக இஸ்லாமிய சங்கத்தை உருவாக்கி பல்வே
சமூக சேவைகளைப் புரிந்துள்ளார். அகில இலங்கை
வை.எம்.எம்.ஏ இயக்கத்தின் கிளையை
மூதூரில் ஸ்தாபித்து பல்வேறு நற்பணிகள
செய்துள்ளார். இதனைவிட மேலும் பல பொது
அமைப்புக்களிலும், விவசாய அமைப்புக்களிலு
அங்கத்துவம் வகித்து சமூகப் பணிகள் நிறையவே
செய்துள்ளார்.

இந்திய அமைதி காக்கும் படை மூதூரில
முகாமிட்டிருந்த காலகட்டத்தில் மூதூர் மக்களுக்கு
இந்திய இராணுவத்தினருக்குமிடையே
ஓர் இணைப்பாளராக செயற்பட்டு மக்கள் தேவைகளை
பூர்த்தி செய்து கொடுத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை எல்லாவற்றிற்கும் மேலாக புனிதப்பணியான தப்லீக் ஜமாஅத்தில் இணைந்து மார்க்கப் பணிகளில் நிறையவே ஈடுபட்டுள்ளார். த'.வா பணிக்காக இந்தியா, பாக்கிஸ்தான், சவூதி அரேபியா, லண்டன் போன்ற நாடுகளுக்கும் சென்றுள்ளார்.

மூதூர் மக்களால் " லத்தீப் ஓவிசர்" எனவும் " லத்தீப் ஹாஜியார்" எனவும் அழைக்கப்பட்ட அன்னார் 1999 ஜூலை மாதம் தனது 82வது வயதில் வபாத்தானார்.

எல்லாம் வல்ல அல்லாஹ் அன்னாருக்கு ஜன்னத்துல் பிர்தௌஸ் எனும் மேலான சுவனபதியை வழங்குவதற்கு நாம் அனைவரும் பிரார்த்திப்போமாக!

நன்றி<br>
துலாம்பரம்<br>
ஜுவைரியா ஷெரீப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாப்பு மரைக்கார்

பிள்ளைகள்

- செய்லாக் காசிம் மரைக்கார்
  - மகன்: ஜாவய்தீன் ஹாஜியார்
- அப்துல் குத்தூஸ் (டொக்டர் சமீம் தகப்பன்)
- அப்துல் லத்திப் (வாப்பி ஜயா)
- சபியா உம்மா
  அப்துல் லத்திப் ஹாஜியார் (ஹாஜியானி ஜெஸீமா ஜவாப்தீன் தாய்)
- ரஹ்மா பீபீ
  முகம்மது மீராசா (ஜபருல்லாஹ் அதிபர் மாமி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காப்பு

01. மூதூரை முன்னேற்ற முயன்றுபல பணிகள்
மேன்மையாய்ப் புரிந்திட்ட முன்னோர்கள் நால்வரை
காதாரும் காவியமாய் கறையனுகா வண்ணம்
காத்திரமாய் நான்பாடக் கருணையிறை காப்பு

## இறைஞ்சல்

02. வாப்புமரைக் காரின்வழி வாரிசென வந்த
வாய்மைமிகு நால்வரினை வளமாக ஈங்கு
பாப்புனைந்து பாடுதற்குத் துணிந்தேனே நானும்
பேரருளால் தமிழ்என்னில் தாவச்செய் அல்லாஹ்

03. நற்சேவை மூதூர்க்கு நாடியே செய்த
நல்லோர்கள் நால்வரினை நான்பாட முயன்றேன்
சொற்சுவையாய் என்நாவை சிறப்பாக ஆக்கி
சுவையான காவியமாய்த் துலங்கச்செய் அல்லாஹ்.

04. தொன்மைமிகு மூதூர்க்கு தலைமையதை அன்று
தரமாகத் தந்தேதான் தகுமுறையாய்க் காத்த
உன்னதத்து நால்வரினை உரைத்திடவே கவியாய்
உயரிறையே உன்னருளை உவந்தருள்வாய் எனக்கு

## அவையடக்கம்

05. காவியமே பாடுகிற காரியத்தில் நானும்
காலடிதான் வைத்ததுவோ கேளிக்கை நிகழ்வே
ஓவியமே தீட்டுவதற்கு ஓர்குருடன் முனைந்த
ஒருகதையை இன்னதுவும் ஒத்திடுமே என்பேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நகர் வாழ்த்து

06. பொன்விளையும் பூமியெனப் பேரதுவும் பெற்று "
பொங்குநதி மாவலியின் பாய்ச்சலுமே கண்டு
மண்ணகத்துப் பகுதிகட்கு மகுடமெனத் திகழும்
மூதூரின் மகிமையது மண்ணுலகில் பெரிது

07. நானிலத்து வளமெல்லாம் நல்வரமாய் அமைந்து
நனிசிறந்த பதியென்று நாடறிந்தோர் போற்றும்
தானியத்தின் களஞ்சியமாய்த் திகழூமூர் மூதூர்
தண்ணீரின் செல்வத்தில் தவழுமூர் மூதூர்.

08. வங்கக்கடல் வலைந்தோடி வகைவகையாய் மீன்கள்
வரமென்றே ஆகிட்ட வனப்புமிகு மூதூர்
அங்கமெல்லாம் தழுவுகிற தென்றலதும் நன்கு
அனுதினமும் வீசுகிற அருமையூர் மூதூர்.

09. நெய்தல்எனும் நன்நிலத்தில் நீண்டுவளர் தெங்கும்
நிமிர்ந்தமலைச் சாரலுடன் நல்லசெறி வனமும்
காய்த்துக்கனித் திட்டமுக்கனி களுடனே எங்கும்
காட்சியது தந்தேதான் கண்கவரும் மூதூர்

10. உலகத்துச் சொர்கமென உரைத்திடவே தோன்றும்
உன்னதத்து வளமெல்லாம் ஒன்றாகத் திரண்டு
நலமுடனே நானிலத்தே நிலைத்தபதி மூதூர்
நாயனவன் கொடையென்ற நாமபதி மூதூர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. மூதூரும் முன்னேற முன்னின்று உழைத்த
முன்னோர்கள் சரிதையினை முனைப்புடனே நோக்கின்
காதுதனில் நாம்கேட்கும் காத்திரமாம் நாமம்
கனபுகழார் வாப்புமரைக் காயர்த்தான் என்போம்.

12. ஊரினது உயர்ச்சிக்கு உன்னதமாய் உழைத்த
உத்தமர்கள் வரிசையிலே உயரிடத்தில் உள்ளார்
நேரியதாம் நெறியினிலே நின்றுபணி யாற்றி
நல்லபெரும் தலைவரென நம்மூரில் நிலைத்தார்.

13. மூதூரின் தோற்றத்தின் முன்னோடி ஆனார்
முதுசமென வரலாறும் மொழியும்நிலை பெற்றார்
சாதகமாய் ஊர்உயரச் சேவைகளும் செய்தார்
சரித்திரத்தில் அழியாத சிறப்பிடமே பெற்றார்.

14. முத்தூரின் தோற்றமுடன் முதல்மனிதர் ஆனார்
முன்னின்று தலைமைக்கு முழுஅர்த்தம் தந்தார்
எத்தனையோ உயர்வுகளை எம்மூர்க்கு அளித்து
எங்களது வரலாற்றின் ஏற்றமென ஆனார்.

15. படைத்தோனைத் தொழுதற்காய் பதிமூதூர் ஆதிப்
பள்ளியெனத் தோன்றிட்ட பெரியபள்ளி தன்னை
உடைமையெனத் தந்திட்ட உத்தமவரும் இவரே,
ஊருக்கு உயர்கொடையாய் உதித்தவரும் இவரே,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. இறையில்லம் பள்ளிக்கும் இவர்தலைமை தந்தார்
இனியபதி மூதூர்க்கும் இவர்தலைவர் ஆனார்
கறையற்ற கரம்கொண்டு கடும்சேவை செய்தார்
காசினிலே இவர்நாமம் கலைகட்டி ஓங்கும்.

17. கல்வியிலே மூதூரார் காலடிதான் பதிக்க
கலைக்கூடம் மத்தியதாம் கல்லூரி தன்னை
நல்முறையில் அமைத்ன்று நமக்களித்த இவரோ
நம்மூரில் உன்னதமாம் நிலையினுக்கு உயர்ந்தார்

18. ஊரினது விடயமெலாம் உன்னதமாய் அன்று
உரியபடி பார்த்திட்ட உயர்தலைமை இவரே
நேரியதாம் நடத்தையினால் நம்மூரின் நெஞ்சம்
நிறைந்தவராம் இவர்புகழோ நிலைத்திடுமே நிலத்தில்

19. முன்னையதாம் மூதூரின் முழுச்சேவை அனைத்தும்
முனைப்புடனே செய்திட்ட முன்னோராம் இவரை
நன்றியுடன் நோக்குகிற நல்லநிலை ஒன்று
நம்மூரில் தளைத்தோங்கும் நிலைவளர்தல் வேண்டும்.

20. வாப்புமரைக் கார்கட்டடம் வளநாமம் தாங்கி
விளங்குகிற மூதூர்மத் தியகல்விக் கூடம்
பூப்போன்ற புனிதநிலை பெறுகிறதே இதனால்
புரிந்திடுவர் கற்றறிந்தோர் புகழ்வோமே நாமும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செய்லாக் காசிம் மரைக்கார்

21. வாப்புமரைக் காரினது வாரிசென வந்த
வளமகனே செய்லாக்கா சிம்மரைக்கார் ஆகும்.
தோப்பாக மூதூரும் தழைத்தோங்க அன்று
தந்திட்ட அவர்தலைமை தகுதலைமை தானே!

22. ஊருக்குத் தந்தையைப்போல் உயர்தலைமை தந்தார்
உன்னதமாம் சேவையிலே உயரின்பம் கண்டார்
பேருக்குப் பதவிதனைப் புரியாத இவரோ
பணிதனிலே பேரின்பம் பெற்றேதான் நின்றார்.

23. காலத்தை ஊருக்காய் கடத்துவதில் தானும்
களிப்புற்ற மாபெரிய கண்ணியோன் ஆனார்
ஞாலத்தில் இன்னாரின் நற்சேவை என்றும்
நல்லபெரும் சான்றாக நம்மூரில் திகழும்

24. பெரியபள்ளி வாயலுக்குப் பாங்கான தலைமை
புரிந்திட்ட பெருமகனாய் புகழ்பெற்றுத் திகழ்ந்தார்
பொருளெல்லாம் இழந்தவரும் பொதுச்சோவை செய்தார்
பேரின்னல் இதனாலே பலவாறு பட்டார்.

25. பட்டினசபைத் தலைமையினால் பதிமூதூர் தன்னை
பலவழியில் உயர்த்தியே பெரும்புகழும் பெற்றார்
கிட்டிட்ட இவர்தலைமை காரணமாய்த் தானே
கண்டதுவாம் மூதூரும் கடுமுயர்வு என்போம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26. நகரசுத்தித் தொழிலாளர் நற்குடியாய் ஊரில்
நிலைகொள்ள வகைசெய்த நாயகரும் இவரே
உகந்தபல சேவைகளை ஊருக்குச் செய்த
உயர்மனிதர் இவர்புகழோ உறங்காது ஊரில்

27. நத்வத்துல் உலமாவெனும் நல்லறபிக் கூடம்
நம்மூரில் உருவாக நாயகராய் நின்றார்
இத்தகைய பணிதனிலே இன்பமே கண்டார்
இவர்தலைமை மூதூர்க்கு இறையோனின் பேறே

28. ஊரினிலே விளையாட்டு மைதானம் ஒன்று
உருவாக வகைசெய்த உயர்மனிதர் இவரும்
பாரியதாம் பலபணிகள் பதியினுக்கு ஆற்றி
பெரும்புகழைத் தனக்கென்று பெற்றிட்டார் தானே!

29. சிறந்தநற் சேவைகளின் செம்மலிவரை மதிக்க
செய்லாக்கா சிம்மரைக்கார் விளையாட்டரங் கென்ற
சிறப்புமிகு நாமமன்று சனங்களுமே சூடி
சிந்தைமகிழ் திட்டபெரும் சரிதையறி வோமே.

30. இன்றிங்கே இவர்பெயரிடப் பட்டகல்லும் இல்லை.
இவரினது பெயருமில்லை இழிசெயலே ஓங்கி
என்னென்ன பெயரெல்லாம் இருக்கிறதே பாரீர்
ஏன்எதற்காம் இச்செய்கை என்றேதான் கேளீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31. ஊர்தன்னில் பிணக்குக்கு உயரியதாம் தீர்ப்பு
உரைக்கின்ற தத்துவத்தை உரித்தாகக் கொண்டார்.
பார்மீதில் மக்கள்பணி புரிந்தேதான் வாழ்ந்தார்
பதிமூதூர் முதுசம்எனப் போற்றிடுமே இவரை

32. மக்கள்பணி புரிவதிலே மனமகிழ்வு கண்ட
மாமனிதர் செய்லாக்கா சிம்மரைக்கார் ஊரில்
தக்கபுகழ் அத்தனையும் தனதாக்கிக் கொண்டார்
தகுதலைமை தந்தேதான் தன்பதியை வளர்த்தார்

33. பட்டினசபைத் தேர்தல்எனப் பதிதனிலே வந்தால்
போட்டியிட அவருடனே பயந்திடுவார் மற்றோர்
கிட்டியதே பெரும்வெற்றி காலமெலாம் இவர்க்கு
கடும்சேவை செய்தவரும் கீர்த்தியுடன் திகழ்ந்தார்

34. தன்சொத்து அத்தனையும் தன்ஊர்க்கே என்று
தந்தவரும் வாழ்ந்ததனால் திரவியமும் இழந்தார்
என்னதான் நேர்த்தாலும் என்ஊரே என்று
என்றுமவர் வாழ்ந்திட்டார் என்பதுவும் புரிவோம்

35. தன்தந்தை வாப்புமரைக் காயர்வழி நின்று
தகுந்தபல சேவைகளைத் தன்னூர்க்குச் செய்தார்.
நன்றெனவே நம்நெஞ்சம் நிறைந்திட்ட இவரை
நம்மூரின் கீர்த்தியென நவில்வோமே நாமும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜவாப்தீன் காஜியார்

36. வாப்புமரைக் காயர்தம் வழிப்பேரர் என்றும்
வாய்மையின்செய் லாக்காசிம் மரைக்கார்மகன் என்றும்
பூப்புனித நிலையினிலே பிறந்திட்ட பெரியார்
பெயரதுவோ ஜவாப்தீன் காஜியார் என்போம்.

37. ஜவாப்தீன் காஜியெனும் யாதார்த்த மனிதர்
ஜனரஞ்சகத் தன்மையிலே தனிச்சிறப்புப் பெற்றார்
அவாவெல் லாம்ஊரினில் அமைதிநிலை என்றார்
வாழ்வினிலே தன்னுயிராய் வாய்மைதனைக் காத்தார்.

38. தந்தையார், பாட்டனார் தலைமைவழி பேணி
தன்னுழைப்பு தன்னூரின் உயர்ச்சியே என்றார்
வந்திட்ட இன்னலெலாம் வனப்புடனே ஏற்றார்
வாழ்வினிலே என்றுமவர் வாய்மைவழி நின்றார்.

39. பிறப்பினிலே சிறப்பதனைப் பேறென்றே பெற்றார்
பொதுநலனைத் தன்நலனாய்ப் பெரிதுமே மதித்தார்
கறைபடியாக் கரத்துடனே காலமெல்லாம் வாழ்ந்தார்
கண்ணியத்தைக் கண்ணாகக் கருதியுமே நடந்தார்

40. ஊரினது உயர்வுக்காய் உயர்பணிகள் செய்தார்
உன்னதமே உயர்ச்சியென உறுதியாய் நின்றார்
பாரினிலே பண்புநெறி பக்குவமாய்க் காத்தார்
பழகுதற்கு இனிதான பண்பெல்லாம் கொண்டார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

41. தன்தலைமைப் பள்ளிதனைத் தரமாகக் காத்தார்
தன்னாயுள் காலமெலாம் தலைமையாய் இருந்தார்
நன்றெனவே ஊர்மெச்ச நாட்டமுடன் அவரும்
நற்பணிகள் செய்தேதான் நம்நெஞ்சம் நிறைந்தார்

42. ஊரினிலே பள்ளிகளின் உயர்சங்கம் தனுக்கு
உயரியதாம் தலைமைதனை உன்னதமாய்ச் செய்தார்
பாரினிலே இவரேதான் பணிக்கென்று மெச்சும்
புகழதனைப் பெற்றேதான் பதிவாழ்ந்து வந்தார்.

43. நல்லோரின் நெஞ்சமெல்லாம் நிறைந்தேதான் உள்ளார்
நல்மனிதன் என்கின்ற நாமமதும் கண்டார்
பல்மொழியும் கற்றறிந்து பேராற்றல் பெற்றார்
பண்புகளின் பாசறையாய் பெரும்புகழும் அடைந்தார்.

44. வன்செயலின் காலத்தே வாழ்வூரில் அமைதி
வளர்ந்தோங்க வேண்டுமென வாஞ்சைமிகக் கொண்டார்
அன்றூரில் " அமைதிக்குழு" அருந்தலைமை ஏற்று
அவர்செய்த பணியெல்லாம் அளப்பெரிதே அம்மா!

45. உண்மைகளின் உறைவிடமாய் உலகத்தில் வாழ்ந்தார்
உள்ளத்தில் தூய்மைநிலை உயர்வாகக் காத்தார்
நன்னெறியைத் தன்நெறியாய் நாளுமவர் கொண்டார்
நாயனவன் அருட்கொடையே நம்மூதூர்க் கவரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

46. தன்னலத்தை என்றென்றும் தவிர்த்தேதான் வாழ்ந்தார்
தனிமுதலோன் இறையோனைத் தினம்பணிந்து நடந்தார்
மண்ணினிலே மகிமைமிகு மனிதரிவர் என்று
மக்களுமே வாழ்த்துரைக்கும் " மாமனிதர்" ஆனார்

47. புன்னகையே வதனத்தில் பூத்திலங்க அவரும்
புவிமீதில் தன் வாழ்வைப் புனிதமாய்க் காத்தார்
நன்னெறியைத் தன்நெறியாய் நன்குபற்றி நாளும்
நற்பண்பின் பாசறையாய் நானிலத்தே திகழ்ந்தார்

48. விவசாயம் ஊரினிலே விருத்தியுற அவரும்
விவசாயச் சங்கமதை வனப்பாக அமைத்து
அவரேதான் தலைமைதனை அதற்குமே தந்தார்
அகிலத்தில் இவர்போன்றோர் அரிதென்றே சொல்வோம்

49. பிரதேச சபைதனிலே பெரும்பதவி தன்னை
பலகாலம் அணிசெய்து புகழேதான் பெற்றார்
குறித்துரைக்கப் பட்டஉத்தி யோகத்தர்" என்னும்
குறித்ததாம் ஆணையா ளர்பதவியும் வகித்தார்

50. தமிழ்முஸ்லிம் உறவுக்காய்த் தினமுமே உழைத்தார்
தீங்கெண்ணம் இல்லாமல் தாரணியில் திகழ்ந்தார்
அமைதியே ஊரினிலே அரசோச்ச அவரும்
அரும்பாடு பட்டெங்கள் அகமெல்லாம் நிறைந்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

51. நல்லதாம் பெற்றோரின் நற்பிறப்புச் சேய்கள்
நல்லோராய் இருப்பார்என நம்பலாம் என்று
நல்லறிஞன் “ அரிஸ்டோட்டில்” நவின்றதுவும் உண்மை
நற்சான்றே ஜவாப்தீன் காஜியிவர் இதற்கு

52. தந்தையார் செய்லாக்கா சிம்மரைக்கார் போன்றும்
தன்பாட்டான் வாப்புமரைக் கார்போன்றும் திகழந்த
விந்தையினை ஜவாப்தீன் காஜியிலே கண்டோம்
வையத்தினது நியதிதனை விளங்கிடுவோம் நாமும்

53. உறவாரை மதிப்பதிலே உயர்நிலையில் இருந்தார்
உதவாத செயலெல்லாம் உதறியே வாழ்ந்தார்
நெறிமுறைகள் தவறாமல் நீதிவழி நின்றார்
நிலத்தினிலே சத்தியத்தின் நிலைக்களனாய் ஆனார்

54. சோம்பல்எனும் சொல்லறியாச் செம்மலரும் ஆனார்
சுறுசுறுப்பாய்ப் பணிகளினைச் சிறப்பாகச் செய்தார்
ஆம்பல்மலர் மகிமையென ஆகிட்ட அவரும்
ஆனமட்டும் ஊருக்கு அதிசிறப்பாய் உழைத்தார்

55. காசுபணம் வாழ்வென்று கதைக்கின்ற உலகில்
கண்ணியமே உயர்வென்று கருதியவர் வாழ்ந்தார்
பேசுகின்ற பேச்சினிலே பேணுதலைக் காத்து
பதிலூதார் முதுசமெனப் பெரும்சிறப்பும் பெற்றார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

56. மனிதத்தின் புனிதத்தை மாண்புடனே பேணி
மாமனிதன் என்றேதான் மண்ணினிலே வாழ்ந்தார்
இனியநல்ல தன்மைகளின் இருப்பிடமே என்று
இப்பதியும் போற்றிடவே இங்கவரும் மிளிர்ந்தார்

57. அடுத்தோர்க்குத் தன்னாலே அல்லலது நேரா
ஆய்ந்தென்றும் அவனியிலே அழகாக நடந்தார்
எடுக்கின்ற பொறுப்பதனை எல்லோரும் மெச்ச
ஏராளம் முயன்றவரும் எழிலாக முடித்தார்

58. ஊரதனை உயிராக உவந்திட்ட அவரும்
ஊர்துறந்து கந்தளாய்க்(கு) ஊரவர்கள் வந்த
கோரமிகு நிகழ்வதனின் நாலாம்நாள் உயிரைக்
கொழும்பினிலே துறந்திட்டார் கொடுமையே அம்மா

59. மக்களெலாம் தம்மூதூர் மண்துறந்த நிலையில்
மரணத்தைத் தழுவிட்ட மாமனிதர் உடலம்
பக்குவமாய்க் குப்பியா வத்தைகொழும் பினிலே
பெருந்திரளார் கூடியடக் கப்பட்ட தம்மா!

60. ஊர்என்றே வாழ்ந்திட்ட உன்னதத்து மனிதர்
ஊர்போற்றும் ஜவாப்தீன் காஜிஎனும் அன்னார்
பேர்என்றும் புவியினிலே பெருமையுடன் வாழும்
பதிமூதூர் முதுசம்எனப் புகழ்பாடி நிற்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

61. புவியினிலே அன்னவரும் புரிந்திட்ட பிழைகள்
பொறுத்திறையும் தன்னுடைய பேரருளால் அவரை
சுவனத்துக் குரியோராய்ச் செய்திடவும் வேண்டும்
சுகந்தத்தில் அங்கவரும் சஞ்சரிக்க வேண்டும்

## அப்துல் லத்தீப் ஹாஜியார்

62. வாப்புமரைக் காயர்வழிக் காவியத்தின் ஈற்றில்
வருகின்ற நபராம்அப் துல்லத்திப் ஹாஜி
பூப்போன்ற புனிதமுடன் புவியினிலே திகழ்ந்தார்
புரிந்திட்ட பணிகளினால் புகழேதான் பெற்றார்

63. மருமகனாய் வாப்புமரைக் கார்க்காண இவரோ
மாமனிதன் என்றேதான் மண்ணுலகில்த் திகழ்ந்தார்
பெரும்சேவை ஊர்க்கிவரும் புரிந்திட்ட தாலே
பேர்சொல்லப் புவிவாழ்ந்த பெரும்மனிதன் ஆனார்

64. சன்மார்க்கச் சுடர்தன்னை மூதூர்க்குத் தந்த
சன்றோராம் முகம்மதுஅப் துல்காதர் ஆலிம்
உன்னதத்துப் புத்திரனாய் உலகினிலே உதித்த
உத்தமரே இவரென்று உணர்வோமே நாமும்

65. சிறப்பதனைப் பிறப்பினிலே சொந்தமெனக் கொண்டார்
சிந்தையெலாம் நிறைந்திட்ட சீர்மையோன் இவரும்
சிறப்பாக மூதூர்க்குச் செய்திட்ட பணிகள்
சரித்திரத்தில் நிலைபெற்றுச் சான்றாகத் திகழும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

66. சுயநலத்தின் சொந்தத்தில் சாய்யாது என்றும்
சனங்களது நலனுக்காய்ச் செயற்பட்டு வந்தார்
பயமெல்லாம் இறைக்கேதான் பகன்றென்றும் நடந்தார்
பகர்வதனை எவ்விடத்தும் பயமின்றிப் பகன்றார்

67. கவலைகளின் மத்தியிலும் களிப்புடனே இருந்தார்
கலகலப்பாய்க் கதைப்பதிலே கனமகிழ்வு கண்டார்
உவகையுடன் ஏழைகளுக் உதவியுமே வாழ்ந்தார்
ஊரில்வரும் பிணக்கெல்லாம் உன்னதமாய்த் தீர்ந்தார்

68. தன்னுடைய கல்வியதன் தாகத்தைப் போக்க
திருமலையின் சென்ஜோசப் கல்லூரி தன்னில்
நன்கேதான் கற்றவரும் நல்நிலைமை அடைந்தார்
நாட்டினது நடப்பெல்லாம் நன்கறிந்து நின்றார்.

69. குடும்பத்து உறவுகளைக் குதுகலமாய்க் காத்தார்
கொடுமைதனைக் காணுகையில் கொதித்தேதான் எழுந்
அடுக்காத செயலெல்லாம் அகற்றியே வாழ்ந்தார்
அன்பாக மக்களுடன் அவரென்றும் நடந்தார்

70. இனப்பகைமை ஓங்கிட்ட இவ்வூரில் அன்று
இன்னரிய அமைதிநிலை இனிதோங்க உழைத்தார்
சனங்களது நலனுக்காய்ச் சலிப்பின்றி முயன்றார்
சத்தியத்தின் வாழ்வுக்குச் சான்றாயும் திகழ்ந்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

71. பணத்திற்குப் பணியாத பண்புடனே மிளிர்ந்தார்
பக்குவத்தின் பாசறையாய்ப் பரிமாணம் பெற்றார்
குணத்தினது குன்றென்றும் குவலயத்தில் வாழ்ந்தார்
கோடியில்ஓர் மனிதரிவர் குறித்துரைப்போம் நாமும்

72. நீதிநெறி காப்பதிலே நிலைத்துமே நின்றார்
நியாயம் எவ்விடத்தும் நன்றாக நவின்றார்
ஆதியிறை அல்லாஹ்வை அஞ்சியே வாழ்ந்தார்
ஆகாத செயலெல்லாம் அகற்றியே நடந்தார்

73. கறைபடியாக் கரமாய்த்தம் கரம்தன்னை அவரும்
காத்தேதான் வாழ்ந்ததனால் காலமெல்லாம் எங்கும்
முறையாகக் கதைக்கின்ற முழுவுரிமை கொண்டார்
மனமெல்லாம் தூய்மையிலே மிளிர்த்திடவே வாழ்ந்தார்

74. முதுசமென மூதாரும் மொழிவோரில் இவரும்
முன்னணியில் உள்ளதனை மகிழ்வுடனே மொழிவோம்
எதுஇடரே என்றாலும் எல்லாமும் ஏற்கும்
ஏற்றமிகு தன்மையுடன் என்றுமிவர் திகழ்ந்தார்.

75. இறையில்லம் கஃபாவுடன் இன்னும்பல இடமாம்
இங்கிலாந் பாக்கிஸ்த்தான் இந்தியா நாடுகள்
முறையாகச் சென்றவரும் மண்ணுலக நடப்பை
மேன்மையாய் அறியும்நிலை மண்ணுலகில் பெற்றார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

76. முடங்கியே மூதூரில் மட்டுமென அன்றி
மடவளையும் கொழும்புடனே மற்றும்ஊர் களும்வாழ்
இடமாகக் கொண்டவரும் இந்நாட்டில் வாழ்ந்தார்
இதனாலே நாடுநகர் இனிதறிந்தே திகழ்ந்தார்.

77. பயணங்கள் இவர்வாழ்வில் பெரிதாகத் திகழ
பரந்திட்ட ஞானத்தின் ஊற்றாகிப் போனார்
உயரியதாம் எண்ணங்கள் உள்ளத்தில் தோன்ற
உதவியதே பயணங்கள் உரியபடி இவர்க்கு

78. பெரியபா லப்பகுதியில் பெரியோனைத் தொழுதிட
பாங்காய்முகை தீன்ஜூம்ஆப் பள்ளிதனை நிறுவிய
முறையான ஸ்தாபகராய் மிளிர்ந்தார் இவரும்
மேலான அவர்சேவை மறையாதே ஊரில்

79. அப்துல்ஜப் பார்என்னும் ஆனபெரும் ஆலிம்
அருமைமிகு சகோதரன் ஆனதனால் அதுவும்
இப்பாரில் இவருக்கு இனியபல உயர்வை
ஈந்ததையும் நாமறிவோம் இவ்வூரில் நன்கு

80. பள்ளிகளின் சம்மேளனத் தலைமைதனை ஊரில்
பக்குவமாய் முதல்வகித்த பெருந்தகையும் இவரே
தள்ளாத வயதினிலும் தன்னூரே என்று
தினமுமவர் செய்திட்ட தியாகம் மிகைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

81. ஊரினது கல்விக்கு உயர்பணியாய் இவரும்
உமர்நெய்னார் புலவருடன் ஒன்றித்து அன்று
பாரியதாம் முயற்சியதால் பள்ளியல்ஹி தாயா
பரிணமிக்க வகைசெய்தார் புரிவோமே நாமும்

82. ஊரினிலே முதலாவது தொழில்நுட்பதி காரி
உயரியதாம் பதவிதனை உன்னதமாய் வகித்தார்
நேரியதாம் நெறிமுறையை நடத்தைதனில் காத்து
நல்லபெரும் மனிதரென நம்மூரில் நிலைத்தார்

83. அன்னறயதாம் முஸ்லிம்இன அரியபெரும் தலைமை
ஆகிட்ட ஏ.எம்,ஏ அஸிசுடனும் மற்றும்
உன்னதத்து சேர்றாசிக் பரித்துடனும் உறவை
உயர்வாகக் காத்திட்டார் உயர்மாந்தர் இவரும்

84. இங்கிலிசு மொழிபேசும் இமயமெனத் திகழ்ந்தார்
இதனாலே சாதனைகள் இங்கவரும் புரிந்தார்
வங்கக்கடல் சூழ்மூதூர் வரமென்று இவரை
வாழ்த்தியே போற்றுவதும் வகையாய்நாம் அறிவோம்

85. இந்தியா அமைதிப்படை ஈங்குற்ற காலை
இன்னலுற்ற மக்களுக்காய் இங்குலிஷ்பா சையால்
அந்தப்படை அதிகாரியு டன்பேசி நன்கே
அவருமே உதவிட்ட அரும்பணியும் மறவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

86. அல்மினா என்கின்ற அறிவின்கூ டம்தை
அவருமே ஸ்தாபகராய் ஆகியன்று அமைத்தார்
சொல்லரும்பல சேவைகளைச் செய்ததனால் அவரும்
சிறந்ததாம் புகழுக்குச் சான்றாகிப் போனார்

87. பெரியபா லப்பகுதியின் ஸ்தாபகக் குடியாய்ப்
பாதமே பதித்திவரும் பாங்குடனே வாழ்ந்தார்
அரியபணி அதிகமென அப்பகுதிக் காற்றி
அழியாப்பெரும் புகழதனை அடைந்தேதான் கொண்டார்

88. பெண்ணினமும் மூதூரில் புனிதமறை கற்க
பெரிதுமவர் முயன்றேதான் றஹ்மானி யாஎனும்
உன்னதமத் ரசாவை உருவாக்கித் தந்தார்
உயர்நிலையில் இக்பால்வீ தியிலுளதைப் பாரீர்

89. தன்னுடைய காணியைப்புர் காணியாப் பள்ளி
தனைநிறுவத் தானமாய்த் தந்தவரும் இவரே!
தன்வாழ்வு எல்லாமும் தன்னினத்து உயர்வாய்
தினம்வாழ்ந்த திருமகனாய்த் திகழ்ந்திட்டார் ஊரில்

90. சேவைகளை ஊருக்குச் செய்திடவே நாடிச்
சங்கங்கள் பலதுடனே வையெம்மெம்மேச் சங்கம்
தேவையெனத் தேர்ந்தவரும் தந்தாரே எமக்கு
தாரணியில் இவர்திறமை தனிச்சிறப்பே என்போம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

91. நூறானி யாச்சமூ கசேவைச் சங்கம்
நிறுவியே அன்றவரும் நவின்றிடவே முடியாச்
சீரான சேவைகளைச் செய்தேதான் ஊரின்
சரிதையிலே தன்பெயரைச் சிறப்பாகப் பதித்தார்

92. ஊருக்கு உயர்ந்தபல பணிசெய்து வாழ்ந்த
உத்தமராம் அப்துல்லத் திப்காஜி நாமம்
பாரினிலே நிலைத்தென்றும் புகழுடனே வாழும்
பல்நூறு ஆண்டின்பினும் பேர்பெற்றே ஒலிக்கும்

93. ஆங்கிலமொழி தன்னிலவர் அருந்தேர்ச்சி பெற்றார்
அதனாலே எங்குமவர் ஆனதெலாம் உரைத்தார்
பாங்காக அவர்பணிக்குப் பாசையிது உதவப்
பெரும்சேவை செய்தவரும் பேரின்பம் கண்டார்

94. கறைபடியாக் கரத்துடனே கீர்த்தியதும் கொண்ட
கண்ணியத்து மனிதரெனக் காலமெலாம் திகழ்ந்தார்
நிறைகுணங்கள் அனைத்தினதும் நிலைக்கலனாய் அவரும்
நிலத்தினிலே தன்பெயரை நிலைநாட்டிச் சென்றார்

95. அல்லாஹ்வை அன்றியவர் ஆருக்கும் அஞ்சா
அருங்குணத்தைத் தன்னுடைமை ஆக்கியே கொண்டார்
பொல்லாங்கைக் கண்டவுடன் பொங்கியே எழுந்தார்
பொறுப்புடனே அன்னதனைப் போக்கிடவே செய்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

96. ஊர்என்றே வாழ்ந்திட்ட உன்னதத்து மனிதர்
உத்தமராம் அப்துல்லத் திப்காஜி செய்த
பார்பாவம் அத்தனையும் பொறுத்திறையே உந்தன்
பேரருளால் சொர்க்கத்தைப் பரிசளிப்பாய் அவர்க்கு

97. வாப்புமரைக் கார்என்னும் வரலாற்று மனிதர்
வாழ்நாளில் ஊருக்காய் வழங்கிட்ட சேவை
தோப்பாக ஊரினிலே தழைத்தோங்கி வாழி!
தலைமைக்குச் சான்றான அவர்நாமம் வாழி!

98. செய்லாக்கா சிம்மரைக்கார் சிறப்பாக ஊர்க்குச்
செய்திட்ட பணியெல்லாம் சிறந்தென்றும் வாழி!
அய்யோவென வியக்கும்வகை அவர்சேவை வாழி!
அகிலத்தில் அவர்புகழும் அழியாது வாழி

99. உன்னதமாம் பணிகளினால் ஊரினிலே நல்ல
உயர்வுற்ற ஜவாப்தீன் காஜிபுகழ் வாழி!
என்றென்றும் அவர்பணிகள் ஏற்றமுடன் வாழி!
எங்களூர் தலைமைக்கு எடுகோளாய் வாழி!

100. அப்துல்லத் திப்காஜி எனும்பெரியார் ஊர்க்கு
ஆற்றிட்ட பணியெல்லாம் அழியாது வாழி!
தப்பற்ற அவர்பணிகள் தரணியிலே வாழி!
தனித்துவமாய் அவர்தலைமை சரிதையிலே வாழி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

101. வாப்புமரைக் கார்வழிக்கா வியமாம்இந் நூலும்
வையகத்தில் அழியாது வளமுடனே வாழி!
தோப்பாக அவர்கிளையார் தழைத்தோங்கி ஊரில்
தகுதலைமை தந்தென்றும் தனிச்சிறப்பாய் வாழி!

102. வாப்புமரைக் கார்வழிக்கா வியநாயகர் கள்தம்
வரலாறும் சேவைகளும் வளமாக வாழி !
பூப்போன்ற புனிதமுடன் அவர்கள்பணி வாழி !
பதிமுதுசம் என்றவர்கள் வாழியவே ! வாழி !

***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்.எம்.எ. அனஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வாப்பு மரைக்காரும் வந்த அவர்குடித்
தோப்பாரும் மூதூரின் தக்கதாம் - காப்பாய்
இருந்தன்று செய்த இனிதாம் பணியைத்
தருகிறதிக் காவியம் தான்.

மூதூர்- எம்.எம்.ஏ.அனஸ்

ISBN - 978-955-44598-9-2

9 789554 459892

Printed by: ART - 0777695656

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org